# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 19.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- இஸ்ரோவின் ராக்கெட்களை ஏவுவதற்கு 3-வது புதிய ஏவுதளம் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப் பட்டினத்தில் அமைப்பது குறித்த சாத்தியங்களை ஆராய்வதற்கு இஸ்ரோவின் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மைய இயக்குநர் “சோமநாத்” தலைமையில் நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
    - இதனால், தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் நாட்டின் 3-வது ராக்கெட் ஏவுதளம் அமைக்கப்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய நிகழ்வுகள்

- 72வது இந்திய சுதந்திர தினத்தை யொட்டி, “சுதந்திரப் போராட்டம் மற்றும் சுதந்திர போராளிகள்” (freedom struggle and freedom fighters) என்ற தலைப்பில் சிறப்புத் திரைப்பட விழா (special film festival) மும்பையில் நடைபெற்றது.

- முழுநேர விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமானது வட இந்தியாவில் முதன் முறையாக ஜம்மு நகரில் அமைக்கப்படவுள்ளது. இது ஆராய்ச்சி கல்வி மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
    - விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான மற்றொரு நகரம் வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - இது அகர்தலாவில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIT – National Institute of Technology)-ன் கீழ் செயல்படும்.

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (Central pollution control Board) தனது காற்றுத் தர குறியீட்டில் (Air quality Index) 62 நகரங்களில் ஹரியானா மாநிலத்தில் குருகிராம் நகரினை இந்தியாவின் அதிக மாசுபட்ட நகரமாக அறிவித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- 2018-ம் ஆண்டிற்கான சர்வதேச ரோபோ கண்காட்சி சீன தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்றது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- 2018-ரஷ்ய உலககோப்பை கால்பந்து போட்டிக்குப் பிறகு கால்பந்து அணிகளின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA) வெளியிட்டுள்ளது.
  - 2018 உலக சாம்பியன் பிரான்ஸ் அணி முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
  - பெல்ஜியம் இரண்டாவது இடத்தையும், பிரேசில் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.
  - இந்திய அணி 96-வது இடம் பிடித்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- உலக மனித நேய தினம் - ஆகஸ்ட் 19 (World Humanitarian Day)
  - ஆண்டுதோறும் ஆகஸ்ட் 19ம் தேதி உலக மனிதநேய தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - 2003 ஆகஸ்டு 19ம் தேதி ஈராக் நாட்டின் பாக்தாத் நகரில், பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஐக்கிய நாடு அவை சிறப்பு பிரதிநிதி செர்சியோ வெய்ரா டிமெல்லா (Sergio Vieira de mello) உட்பட 20 பேர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர்.
  - இதன் நினைவாக ஐக்கிய நாடுகள் அவை 2008 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 19ம் தேதியை “உலக மனிதநேய தினமாக அறிவித்துள்ளது.
  - 2018ம் ஆண்டு உலக மனித நேய தின கருப்பொருள். Not A Target

**பொருளாதார நிகழ்வுகள்**

- இந்திய ரிசர்வ வங்கியால் நடத்தப்பட்ட 2016-2017ம் ஆண்டுக்கான உள்நாட்டு பணம் அனுப்புதலுக்கான கணக்கெடுப்பில் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) முதலிடத்தில் உள்ளது.
  - வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட மிக அதிக நிதியை பெற்ற மாநிலமாக கேரளா உள்ளது.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- ஏரோ ஜெல் (Aerogel) – அறிவியலாளர்கள், பீர் தயாரிப்பின் போது வரும் கழிவுப் பொருட்களிலிருந்து அதிக வெப்ப ஏற்புத் திறனுடைய ஒளி ஊடுருவக் கூடிய, மீத்திறன் காப்பு கூழ்மமான (Super Insulating transparent gel) ஏரோஜெல்-லை (Aerogel) உருவாக்கியுள்ளனர்.
  - இது சந்திரன் அல்லது செவ்வாய் போன்ற புவிக்கு அப்பாலான வாழ்விடங்களில் பசுமை வீடு அமைக்க உதவுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

We Shine Academy